வடிக்கை எடுக்கவில்லை என்ற ஒரே காரணத்தால், அரசு வாளா இருக்காமல், அரசே முன்வந்து அந்தப் பிற்பட்ட பகுதியில் இருக்கும் மாணவர்கள் பி. காம் பட்டப் படிப்பு படிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இந்த அடிப்படையில் நாம் நடவடிக்கைகளை எடுத்தால், பல்கலைக் கழகங்களுக்கு இருக்கும் தன்னாட்சித் தன்மை போய் விடும் நிலைமையேற்படும். பல்கலைக் கழகம் என்பது சமுதாயத்திற்கு எதிரான ஒரு அமைப்பு அல்ல. அதுவும் சமுதாயத்தின் தேவைகளை அனுசரித்துத்தான் நடவடிக்கை எடுத்து வருகிறது. முறையாக முயற்சி எடுக்காத குறைபாட்டை வைத்துக் கொண்டு நாம் பல்கலைக் கழகத்தின் தன்னாட்சித் தன்மைக்கு பாதகமான நடவடிக்கை எடுத்தால் ஒரு காலத்தில் பல்கலைக் கழகம இருக்கின்ற உரிமைகளையும் இழந்து ஒன்றுமே ஆகிவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போளூரில் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்

***வினா எண். 5—திரு. இல. பலராமன்:** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வட ஆற்காடு மாவட்டம் போளூர் நகரத்தில் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் ஏற்படுத்துவது குறித்த பரிந்துரை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், தற்போது என்ன நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :—(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே, இது குறித்து உயர்நீதிமன்றம் தன்னுடைய அறிக்கையிலே இங்கு தேவை என்று சொல்லியிருப்பதாலும், இது தாலுகா தலைநகரமாக இருப்பதாலும், இங்கு வழக்குகள் அதிகமாக இருப்பதாலும், இங்கு ஒருமுதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட் அமைப்பது பற்றி அரசு ஏற்கெனவே அறிக்கை விட்டிருந்தாலும், கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே சொல்லியிருந்தாலும், முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட் ஏற்படுத்த அரசு மீண்டும் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே• இது குறித்து உயர்நீதிமன்றம் பரிந்துரை ஒன்றும் செய்யவில்லை• நீதிமன்றங்கள் அதிகார வரம்புக்குழு கூட இது குறித்து பரிந்துரை செய்யவில்லை. இருந்தாலும், திருவண்ணாமலையில் உட்கோட்ட மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தை அமைத்து, போளூர், செங்கம், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் இரண்டாம் வகுப்புநீ திமன்றங்களைக் கொண்டு வரலாம் என்று நீதி மன்றங்கள் அதிகார வரம்புக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதை கருத்திற் கொண்டு, உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பி, அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவரவர்களே, போளூரிலே நீதிமன்றம் வேண்டுமென்று கேட்கின்றபோது, ஆற்காடு தாலுகாவில் 1911 ஆம் ஆண்டிலிருந்து நீதிமன்றம் ஒன்று இருந்து வந்திருக்கிறது ; இதுவரையில் அது எந்த நேரத்தில் எடுக்கப் பட்டது என்று தெரியவில்லை ; ஆனால் அந்த நீதிமன்றத்திற்கு இருந்த கட்டிடங்கள் அனைத்தும்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீதிமன்றம் போளூரில் அமைப்பது பற்றிய வினா இது. ஆகவே, உங்கள் வினாவை அனுமதிப்பதற்கில்லை.

சிறு விவசாயிகள்.

*வினா எண். 6— திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிறிய விவசாயிகளின் கடன்களை ரத்து செய்வதில் தஞ்சை மாவட்டத்திலுள்ள 5 ஏக்கருக்கும் முகவை மாவட்டத்திலுள்ள 5 ஏக்கருக்கும் வித்தியாசம் இருப்பது பற்றி அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றி அரசின் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) மற்றும் (ஆ) சிறிய விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்வது பற்றிய அரசின் அறிவிப்பில் சிறு விவசாயிகள் என்பது 5 ஏக்கர் உடைய விவசாயிகள் என்ற அடிப்படையில் பின் பற்றப்பட்டிருக்கிறது.

திரு. ச. அங்குசாமி : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திற்கும் முகவை மாவட்டத்திற்கும் ஏக்கர் விலையில் வித்தியாசம் இருப்பதால், கடனை ரத்து செய்வதிலும் வித்தியாசம் இருப்பதாகத் தெரிகிறது. அதற்குரிய விவரத்தை அறிவிப்பார்களா ?